கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
அ.வ.எண். 270 /2024

நாள் : 22.04.2026.

வா.சா.2 – முருகேஸ்வரி

**1 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1. வா.சா.1 ஆண்டிச்சாமி என்னுடைய உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவருடைய வாக்குமூலத்தில் என்ன விவரங்களை கூறினாரோ அதே விவரங்களை தான் என்னுடைய வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. அனைத்து சொத்துக்களிலும் பாகம் கேட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். வழக்கு போட்டுள்ள சொத்துக்களின் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் மற்றும் நான்குமால் ஆகிய எந்த விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை. பட்டமுத்துநாயக்கர் என்னுடைய தாத்தா ஆவார். அவருக்கு ஏழு பிள்ளைகள் என்றால் சரிதான். தற்போது அந்த ஏழு பிள்ளைகளில் செல்லமுத்துவை தவிர மற்ற அனைவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளான ரவிச்சந்திரன் மற்றும் விஜயேந்திரன் ஆகியோர் பட்டத்துப்பாண்டியின் மகன்கள் என்றால் சரிதான். என் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர்கள் சில சொத்துக்களை விற்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 மற்றும் 2ம் வாதியான என்னுடைய சகோதரர்கள் ஆண்டிச்சாமி மற்றும் மணிகண்டன் ஆகியோர் சில குடும்ப சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் சின்னபாண்டி ஒரு குடும்ப சொத்தை விற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை, எனக்கு படிக்க தெரியாது. எதிர் வழக்குரையை படித்து பார்க்காமலேயே என்னுடைய வழக்கறிஞர் மூலம் மறுப்புரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1975ம் ஆண்டே பட்டமுத்துநாயக்கரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 1 முதல் 11 இலக்க சொத்துக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனாரான பட்டத்துப்பாண்டிக்கு வாய்மொழியாக பாகம் ஒதுக்கப்பட்டது என்று சொல்வது தவறு. தாவா 35 வது இலக்க சொத்தை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் சுயசம்பாத்திய சொத்து

என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்தை கூட்டுக்குடும்ப சொத்தாக தவறுதலாக சித்தரித்துள்ளோம் என்று சொல்வது தவறு. என் தாத்தாவுக்கு ரகுநாதமடை கிராமத்தில் பல சொத்துக்கள் இருந்தன என்றால் சரிதான். ரகுநாதமடை கிராமத்தில் பல சொத்துக்களை என் தாத்தாவின் பிள்ளைகள் வெவ்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆகையால் தான் ரகுநாதமடை கிராமத்தில் அமைந்துள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

3. 10ம் பிரதிவாதியான செல்லமுத்து என்னுடைய சித்தப்பா ஆவார். 10ம் பிரதிவாதியான செல்லமுத்து ரகுநாதமடை கிராமத்தில் உள்ள சர்வே எண் 176/3ல் கண்ட சொத்தை விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 மற்றும் 2ம் வாதிகளான என்னுடைய சித்தப்பான மகன்களான ஆண்டிச்சாமி மற்றும் மணிகண்டன் ஆகியோர் ரகுநாதமடை கிராமத்தில் உள்ள சர்வே எண் 160/3ஏ–ல் கண்ட சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனாரான சின்னபாண்டி ரகுநாதமடை கிராமத்தில் உள்ள சர்வே எண் 160/1ஏ, 160/1பி, 160/3பி–ல் கண்ட சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சித்தப்பாவான நடராஜன்நாயக்கர் அவருடைய மகனான 9ம் பிரதிவாதி முத்துராஜுக்கு சேதுபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சில சொத்துக்களை தானபத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1995ம் ஆண்டில் 10ம் பிரதிவாதி செல்லமுத்து சேதுபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சில சொத்துக்களை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. 1ம் பிரதிவாதிக்கு 3 முதல் 5ம் பிரதிவாதிகள் ஆவண எண் 3637/2023 மற்றும் 3638/2023 ஆகிய தானபத்திரங்கள் மூலம் தாவா 1 முதல் 11 இலக்க சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து பற்றி எனக்கு தெரியும். 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் இளவராக இருந்தபோது அவர்களுடைய தகப்பனரான பட்டத்துப்பாண்டி இளவர்களுக்காக காப்பாளராக இருந்து கடந்த 1977ம் ஆண்டு அவருடைய சகோதரரி பாலம்மாள் மற்றும் சகோதரியின் மகனான சீனிவாசன் ஆகியோர்களுக்கு ஒரு தான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. பாலம்மாள் மற்றும் சீனிவாசன் ஆகியோரை இவ்வழக்கில் ஒரு தரப்பினரான சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10ம் பிரதிவாதி செல்லமுத்து தாவா 24 முதல் 29 இலக்க சொத்துக்களை ஜெயராஜ் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஜெயராஜை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகிறது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரின் சகோதரிகள் பெயர் பாலம்மாள் மற்றும் வெள்ளையம்மாள் என்றால் சரிதான். மேற்சொன்ன என் இரு அத்தைகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன என் இரு அத்தைகள் அகத்தாக்குளம், சேதுபுரம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. தாவா 18 முதல் 23 இலக்க சொத்துக்களை 9ம் பிரதிவாதி முத்துராஜுக்கு அவருடைய தகப்பனார் நடராஜன்நாயக்கர் அவர்கள் இனாம் செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும், மேற்சொன்ன இனாம் செட்டில்மெண்ட் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை பொறுத்து இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கோராமல் 1 முதல் 4ம் பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் நல்ல விலைக்கு போவதால் பகைமை கொண்டு பொய்யான சங்கதிகளை கொண்டு அவர்கள் மீது தவறுதலாக வழக்காடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ரகுநாதமடை கிராமத்தில் அமைந்துள்ள சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்திற்கு உள்ளாகிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 1975ம் ஆண்டே என்னுடைய குடும்ப உறுப்பினர்களுக்கிடையே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக அவரவர்கள் தனித்த சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றும், பட்டா பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.04.22 17:56:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.